மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, நாளைக் காலை 9 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1·30 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

(8) பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

129. தமிழ்நாடு 1961ஆம் ஆண்டு சிட் பண்டு சட்டத்தின் கீழ் தமிழ்நாட்டில் எல்லைக்குள் அமைந்துள்ள பேங்க் ஆப் கொச்சின் லிமிட்டெட்டின் கிளைகளை அங்கீகாரம் பெற்ற வங்கியாக அறிவிக்கும் பொருட்டு வணிக வரிகள்— அறக் கட்டளைகள் துறையின் 25–1–1979ஆம் தேதியிடப்பெற்ற அரசாணை எண் 70-ல் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1961 ஆம் ஆண்டு சிட் பண்டு சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 24/1961) 63 (4) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

%130. 1978ஆம் ஆண்டிற்கான அண்ணா போக்குவரத்துக் கழகத்தின் 6ஆவது ஆண்டறிக்கை [1956ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

%131. 1978ஆம் ஆண்டிற்கான சோழன் போக்குவரத்துக் கழகத்தின் 7ஆவது ஆண்டறிக்கை [1956ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

%132. 1978ஆம் ஆண்டிற்கான பாண்டியன் போக்குவரத்துக் கழகத்தின் 7ஆவது ஆண்டறிக்கை [1956ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

ஆ. அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள்.

*102. 1978–79ஆம் ஆண்டிற்கான, தமிழ்நாட்டில் வேளாண்மை வளர்ச்சி பற்றிய, தமிழ்நாடு வேளாண் பண்ணைக் கழகத்தின் ஆய்வுரை (தமிழ், ஆங்கிலம்).

**103. சில வேளாண்மைத் திட்டங்கள், புதிய ரகங்கள் குறித்த சிறு புத்தகங்கள் (தமிழ்).

1979 மார்ச் 30]

***104. 1973–74ஆம் ஆண்டிற்கான இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் (சிவில்) அறிக்கையில் வீராணம் முதலிய குடிநீர் வழங்கும் திட்டங்கள் குறித்த பத்திகளின் மீதான தமிழ்நாடு பொது நிறுவனங்கள் குழுவின் அறிக்கை (ஆறாவது பேரவை—ஆறாவது அறிக்கை) (தமிழ், ஆங்கிலம்).

***105. மருத்துவ மனைகள் மற்றும் மருந்தகங்கள் பற்றி மதிப்பீட்டுக் குழு அளித்த பரிந்துரைகள் மீது அரசு மேற்கொண்ட நடவடிக்கைகள் குறித்து தமிழ்நாடு மதிப்பீட்டுக்குழு அளிக்கும் அறிக்கை 1977–79 (ஆறாவது பேரவை—எட்டாவது அறிக்கை).

@106. கோரிக்கை எண். 10. பால் பண்ணை வளர்ச்சித் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 1979–80 (தமிழ், ஆங்கிலம்).

@107. 1978–79 ஆம் ஆண்டு தமிழ்நாடு பால்வள நிறுவனத்தின் செயலாக்கம் பற்றிய ஆய்வுரை (தமிழ், ஆங்கிலம்).

108. 1973–74ஆம் ஆண்டிற்கான வாக்களிக்கப்பெற்ற மானியக் கோரிக்கைகளுக்கும், சாட்டப்பெற்ற நிதி ஒதுக்கீடுகளுக்கும் கூடுதலாகச் செலவழித்த தொகைகள் பற்றிய தமிழ்நாடு பொதுக் கணக்குக் குழுவின் அறிக்கை, 1977–79 (ஆறாவது பேரவை—ஆறாவது அறிக்கை) (தமிழ், ஆங்கிலம்).

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

%தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதிகளின் 21(5) விதிகளில் கண்ட வரம்பு நிபந்தனையை ஒட்டி சட்டமன்ற நூலகத்தில் வைக்கப்பெற்றுள்ளது.

*26–3–1979 அன்று உறுப்பினர்களுக்கு அனுப்பப்பெற்றன.

**27–3–1979 அன்று உறுப்பினர்களுக்கு அனுப்பப்பெற்றன.

***29–3–1979 அன்று பேரவை முன் வைக்கப்பெற்றன.

@29–3–1979 அன்று உறுப்பினர்களுக்கு அனுப்பப்பெற்றன.